செ.வெ.எண்: 44 நாள்: 28.03.2017

# அரியலூர் மாவட்டத்தில் தாய் திட்டத்தின் கீழ் ஏரிகளை ஆழப்படுத்தப்படவுள்ள பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப., அவர்கள் நேரில் ஆய்வு.

அரியலூர் மாவட்டம், திருமானூர் மற்றும் செந்துறை ஊராட்சி ஒன்றியங்களில் ஊரக வளர்ச்சித்துறையின் சார்பில் **தாய் திட்டத்தின் கீழ்** ஏரிகளை ஆழப்படுத்தப்படவுள்ள பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்கள் இன்று (28.03.2017) நேரில் ஆய்வு செய்தார்.

**இவ்வாய்வின்போது, மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது :-**

அரியலூர் மாவட்டத்தில் ஊரக வளர்ச்சித்துறையின் சார்பில் **திருமானூர் ஊராட்சி ஒன்றியத்தில்** வாரணவாசி ஊராட்சியில் உள்ள சாமான் ஏரி, வெற்றியூர் ஊராட்சியிலுள்ள திருப்பெயர் கிராமத்தில் பிள்ளையார் குளம், சின்னப்பட்டக்காடு ஊராட்சியிலுள்ள நரசிம்மபுரம் கிராமத்தில் பாளையத்து ஏரி, மற்றும் **செந்துறை ஊராட்சி ஒன்றியத்தில்** பெரியாக்குறிச்சி கிராமத்தில் உள்ள எல்லப்பன் ஏரி மற்றும் நாராயணசாமி கோனார் ஏரி, மணப்பத்தூர் கிராமத்தில் உள்ள பெரிய ஏரி ஆகிய ஏரிகளை 2016-17ஆம் ஆண்டிற்கு **தாய் திட்டத்தின் கீழ் தூர் வாரவும், கரைகளை பலப்படுத்தவும், ஆழப்படுத்தப்படவும்** உள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்.

இவ்வாய்வின்போது, திட்ட இயக்குநர் ஊரக வளர்ச்சி முகமை திட்டம் திருமதி.லோகேஸ்வரி, செயற்பொறியாளர், உதவி செயற்பொறியாளர்கள் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்கள், ஒன்றியப்பொறியாளர்கள், ஒன்றிய பணி மேற்பார்வையாளர்கள் உடனிருந்தனர்.

செய்தி வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.